**<u>තුන් වන වර කියවීමට පෙර ඉඩම් සංවර්ධන ආඥා පනත සංශෝධන පනත් කෙටුම්පතෙහි 4 වන සහ 9 වන වගන්ති ඉල්ලා අස්කර ගන්නා ලෙස ඉල්ලීම</u>**

ඊයේ දිනයේ දෙවන වර කියවීම සඳහා ඉදිරිපත් කරන ලද ඉඩම් සංවර්ධන (සංශෝධන) පනත් කෙටුම්පතෙහි ඉඩම් උරුමයේ දී ස්ත්‍රී පුරුෂ සමාජභාව විෂමතාවය ඉවත් කිරීම ඇතුළු සාධනීය වගන්ති රැසක් ඇතුළත් වේ. කෙසේ වෙතත්, සුළු පරිමාණ ගොවීන්ගේ අයිතිවාසිකම් වලට හානිකර වන වගන්ති දෙකක් තිබේ. එම වගන්ති දෙක වන 4 වන වගන්තිය සහ 9 වන වගන්තිය **<u>සුළු පරිමාණ ගොවීන්ට විශාල ප්‍රමාණයෙන් ඔවුන්ගේ ඉඩම් අහිමි කිරීමට, ඉඩම් නොමැතිකමට සහ ඔවුන්ව සාගින්නෙන් පෙළීමට</u>** මග පාදනු ඇත.

9 වන වගන්තිය 4 වැන වගන්තියට සම්බන්ධ බැවින් පහත සඳහන් සටහන 4 වන වගන්තිය පිළිබඳව වේ:

4 වැනි වගන්තිය: "මෙම වගන්තිය මගින් ප්‍රධාන ප්‍රඥප්තියේ 19 වන වගන්තිය සංශෝධනය කරන අතර එමගින් ඉඩම් කොටසෙහි හිමිකරුට ප්‍රාදේශීය ලේකම්වරයාගේ අනුමැතියකින් තොරව ඉඩම් කොටස උකස් කිරීමට ඉඩ සලසයි".

4 වන වගන්තිය මගින් මුල් 'ඉඩම් සංවර්ධන ආඥාපනතෙහි' 19 වන වගන්තිය සංශෝධනය කිරීමට අපේක්ෂා කරයි. මුල් 'ඉඩම් සංවර්ධන ආඥාපනතෙහි' 19(6)(ආ) වන වගන්තියෙහි සඳහන් වන පරිදි ප්‍රදාන ඉඩම හිමි අයෙකුට තම ඉඩම 'බැහැර කිරීමට' අවශ්‍ය නම් ඔහු/ඇය ඒ සඳහා දිසාපතිවරයාගේ පූර්ව අනුමැතිය ලබා ගත යුතුය.

4 වැනි වගන්තිය මගින් එකී අවශ්‍යතාවය ඉවත් කර ඇති අතර, **බලපත්‍රලාභී වාණිජ බැංකුවක්**, රාජ්‍ය උකස් හා ආයෝජන බැංකුව, ලංකා සංවර්ධන මූදල් සංස්ථාව, ශ්‍රී ලංකා ජාතික සංවර්ධන බැංකුව, ජාතික නිවාස සංවර්ධන අධිකාරිය, ශ්‍රී ලංකා නිවාස සංවර්ධන මූල්‍ය සංස්ථා බැංකුව, ලියාපදිංචි කරනු ලැබූ යම් සංගමයක් හෝ **වෙනත් නියමිත ආයතනයක් වෙත ඉඩම උකස් කිරීමේ දී** දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලයේ පූර්ව අනුමැතිය අවශ්‍ය නොවන බව සඳහන් වේ.

මෙම වගන්තිය සම්බන්ධ ගැටළුව ශ්‍රී ලංකාවේ මෑත ඉතිහාසය හා ණය තත්ත්වය සංදර්භය තුළ කියවිය යුතු වේ. අවම වශයෙන් පසුගිය දශක දෙකක කාලය තුළ, කාන්තාවන්ට 'පහසු ආපසු ගෙවීමේ' ණය ලබ දෙන ක්ෂුද්‍ර මූල්‍ය සමාගම් වලට කිසිදු පරීක්ෂා කරනු ලැබීමකින් තොරව ග්‍රාමීය ප්‍රදේශවලට ව්‍යාප්ත වීමට ඉඩ ලබා දෙන ලදී. මෙම සමාගම් ණය අලෙවිකරණය සහ ණය විකිණීම සිදු කරන අතර, එම නිසා බොහෝ දෙනෙකු මෙම ණය ගැනීමට පෙළඹුණි. මේ වන විට, ණය ආපසු ගෙවීමට නොහැකිවීම යන සරල හේතුව නිසා පවුල් ප්‍රාග්ධනය නැතිවී යාම, මන්දපෝෂණය, ගෘහස්ථ හිංසනය, ලිංගික සූරාකෑම සහ සියදිවි නසාගැනීම් වැනි ගැටළු සමග පොරබදමින් සිටිති.

කෙසේ වෙතත්, දිසාපතිවරයාගේ පූර්ව අනුමැතියකින් තොරව තම ඉඩම් උකස් කිරීමට මිනිසුන් නොපෙළඹෙන ලෙස **ඉඩම් සංවර්ධන ආඥාපනතෙහි තිබෙන ආරක්ෂාව හේතුවෙන් මෙම සමාගම්වලට මිනිසුන්ගේ ඉඩම් වලට අත තැබීමට/මිනිසුන් ඔවුන්ගේ ඉඩම්වලින් බැහැර කරවීමට නොහැකි විය.**

තමන් දැවැන්ත ණය බරකට හසුවී, ණය ආපසු ගෙවීමට නොහැකිව දැඩි අරගලයක යෙදී සිටින බව පසුගියදා කිලිනොච්චිය සහ ගම්පහ යන ප්‍රදේශවල ගොවීන් සමග පැවති සාකච්ඡාවල දී එම ගොවීහු ප්‍රකාශ කළහ. මෙය සාමාන්‍ය බුද්ධියට වැටහෙන කරුණකි. එයට පිළිතුර නම්, මෙම ණය ගොවීන්ට තමන් සතු අවසන් වත්කම වන ඔවුන්ගේ ඉඩම් අනතුරේ හෙළීමට බල නොකෙරන ණය යෝජනා ක්‍රම වීමයි.

මෙම පනත් කෙටුම්පත ඉදිරිපත් වීමත් සමග සමග **ණය ලබා ගැනීමට නොඉවසිල්ලෙන් සිටින ගොවීන් බැංකු සහ මූල්‍ය ආයතනවල ණය ලබා ගැනීමට ඔවුන්ව පොළඹවන කොල්ලකාරී ණය යෝජනා ක්‍රමවලට නිරාවරණය වනු ඇත**. ඔවුන්ගේ එකම අරමුණ ණය සඳහා ඇපකරයක් ලෙස ඉඩම් ඇපයට තබා ගැනීමයි. **මීළඟ වසරේ දී ගොවීන්ට මෙම ණය ආපසු ගෙවීමට නොහැකි වනු ඇති අතර, එවිට ඔවුන්ට ඔවුන්ගේ එම ඉඩම් අහිමි වී** ඒවා විශේෂයෙන් ම පරාටේ බලය ඇති බැංකුවලට හිමි වනු ඇත.

විපක්ෂයේ මන්ත්‍රීවරයෙකු විසින් පාර්ලිමේන්තුවේ දී මෙම ගැටළුව මතු කළ අවස්ථාවේ දී ඔහු කතා කළේ උතුරු නැගෙනහිර ගොවි ජනතාව ගැන පමණකි. එහෙත් මෙය අනුරාධපුරය, පොළොන්නරුව, මොණරාගල සහ ගම්පහ ඇතුළුව සමස්ත රටට ම බලපාන ගැටළුවක් වනු ඇත.

**<u>மூன்றாம் மதிப்பீட்டுக்கு முன்னர் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத் (டுனுழு) திருத்தத்தின் வாசகம் 4 மற்றும் 9 இனை வாபஸ்பெறுவதற்கான வேண்டுகோள்</u>**

நேற்று இரண்டாம் மதிப்பீட்டுக்காகக் கொண்டுவரப்பட்ட காணி அபிவிருத்திச் (திருத்தம்) சட்டமூலம் காணி வாரிசுரிமையில் பால்நிலை ஏற்றத்தாழ்வினை இல்லாமலாக்குவது உள்ளிட்ட பல வரவேற்கத்தக்க வாசகங்களைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், சிறு அளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குக் குந்தகமான இரண்டு வாசகங்கள் அதில் உள்ளன. குறிப்பிட்ட வாசகங்களான வாசகம் 4 மற்றும் வாசகம் 9 ஆகியவை **பாரிய அளவிலான காணி உடைமையகற்றல், காணியற்றநிலை மற்றும் சிறிய அளவிலான விவசாயிகளின் பட்டினிச் சாத்தியம்** ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லும்.

வாசகம் 9 வாசகம் 4 உடன் தொடர்புபட்டுள்ளதால் பின்வரும் குறிப்பு வாசகம் 4 இல் உள்ளது.

வாசகம் 4: ''நிலத்தின் உரிமையாளர் பிரதேச செயலாளரின் அங்கீகாரம் இல்லாமல் நிலத்தினை அடைமானம் வைப்பதற்கு அவரை இயலுமாக்கும் வகையில் முதன்மைச் சட்டத்தின் பிரிவு 19 இனை இந்த வாசகம் திருத்துகின்றது.''

அசலான காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 19 இனை வாசகம் 4 திருத்த நாடுகின்றது. மானிய நிலத்தினை உரிமையாகக் கொண்டுள்ள ஒருவர் அதனை விற்றுத்தீர்க்க விரும்பினால் அவர் அரசாங்க அதிபரின் அங்கீகாரத்தினைப் பெறவேண்டும் என அசலான காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 19 (6) (டி) குறிப்பிடுகின்றது.

வாசகம் 4 இத்தேவைப்பாட்டினை அகற்றி, '**உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில்,** அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில், இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில், ஏதாவது பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது **ஏனைய குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தில் காணியினை அடைமானம் வைக்கையில்** மாவட்டச் செயலாளரின் முன்னங்கீகாரம் தேவையில்லை எனக் குறிப்பிடுகின்றது.'

இந்த வாசகத்திலுள்ள பிரச்சினை, இலங்கையின் அண்மைக்கால வரலாறு மற்றும் கடன் சூழ்நிலை ஆகிய சூழமைவில் வாசிக்கப்படவேண்டும். குறைந்தது கடந்த இரண்டு தசாப்தங்களாக பெண்களுக்கு 'இலகுவாக மீளச் செலுத்தக்கூடிய' கடன்களை வழங்குவதற்காகக் கிராமங்களில் எவ்வித பரிசீலிப்பும் இன்றிப் பெருகுவதற்கு நுண் நிதிக் கம்பனிகள் அனுமதிக்கப்பட்டன. இந்தக் கம்பனிகள் கடன்களைச் சந்தைப்படுத்திக் கடன்களை விற்கின்றன. இதனால் பல மக்களும் இந்தக் கடன்களை எடுப்பதற்குத் தூண்டப்பட்டனர். கடன்களை மீளச் செலுத்த முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காகத் தற்போது குடும்பங்கள் முதலீட்டு இழப்பினாலும் போ'ாக்கின்மையினாலும் வீட்டு வன்முறையினாலும் பாலியல் சுரண்டலினாலும் தற்கொலைகளினாலும் போராடி வருகின்றன.

**இருப்பினும்,** அரசாங்க அதிபரின் முன்னங்கீகாரம் இன்றித் தங்களின் காணிகளை அடைமானம் வைப்பதற்கு மக்களைத் தூண்ட முடியாத **காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் பாதுகாப்பின் காரணமாக இந்தக் கம்பனிகளால் மக்களின் காணிகளைத் தொடுவதற்கோ அல்லது மக்களின் காணிகளின் உரிமைகளை அவர்களிடம் இருந்து அகற்றுவதற்கோ** இயலாமல் இருந்தது.

கிளிநொச்சி மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் விவசாயிகளுடன் அண்மையில் நடத்திய கலந்துரையாடல்களின் போது விவசாயிகள் தாங்கள் பாரிய கடன்களினுள் விழுந்துள்ளதாகவும் மீள்கொடுப்பனவினைச் செலுத்தப் போராடிவருவதாகவும் குறிப்பிட்டனர். இது பொது அறிவாகும். அதற்கான பதில், விவசாயிகள் அவர்களிடம் உரிமையாக உள்ள கடைசிச் சொத்தினை – அவர்களின் காணிகளை – ஆபத்துக்குள்ளாக்குவதற்கு அவர்களைப் பலவந்தம் செய்யாத கடன் திட்டங்கள்.

இந்தச் சட்டமூலம் வந்ததும், கடன் பெறுவதற்காகத் தவித்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் கடன்களை அணுகுவதற்கு விவசாயிகளைக் கவர்ந்திழுக்கும் **வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் விழுங்கி ஏப்பம் விடும் கடன் திட்டங்களுக்கு காட்டிக் கொடுக்கப்படுவார்கள்.** அவர்களின் ஒரே நோக்கம் கடன்களுக்கான பிணையுறுதியாகக் காணிகளைப் பெறுவதேயாகும். **விவசாயிகளினால் அவர்களின் கடன்களை அடுத்த வருடம் மீளச் செலுத்த முடியாது. இதனால் அவர்கள் தங்களின் காணிகளைக் குறிப்பாக பராடே நிறைவேற்று அதிகாரம் கொண்டுள்ள வங்கிகளிடம் இழப்பர்.**

வடக்குக் கிழக்கு விவசாயிகளுக்காக மட்டும் பேசும் ஏதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் இந்த விடயம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. எவ்வாறாயினும், இது அநுராதபுரம், மொனராகல, பொலனறுவை மற்றும் கம்பஹா என நாடு முழுவதும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

**REQUEST TO WITHDRAW CLAUSE 4 AND 9 OF THE LDO AMENDMENT BEFORE THE THIRD READING**

The Land Development (Amendment) Bill which came for second reading yesterday has many welcome clauses including closing the gender disparity in land inheritance. However there are two clauses which are detrimental to the rights of small scale farmers. The said two clauses Clause 4 and Clause 9 would lead to **mass scale land dispossession, landlessness and possible starvation of small scale farmers.**

The following note is on clause 4 as clause 9 is connected to clause 4.

Clause 4: "This clause amends section 19 of the principal enactment which enables the owner of the holding to mortgage the holding without the approval of the Divisional Secretary"

Clause 4 seeks to Amend Section 19 of the original LDO. Section 19 (6) (b) of the original LDO states that if a person who owns the Grand Land wants to 'dispose' off his land he/she has to obtain prior approval of the Government Agent.

Clause 4 removes this requirement and states prior approval of the District Secretariat is not needed when **mortgaging the land** '**to a licensed commercial bank**, the State Mortgage and Investment Bank, the Development Finance Corporation of Ceylon, the National Development Bank of Sri Lanka, the National Housing Development Authority, the Housing Development Finance Corporation Bank of Sri Lanka, any registered society or **other prescribed institution."**

The problem with this clause must be read in the context of the recent history of Sri Lanka and the debt situation. For at least the last two decades micro finance companies were allowed to proliferate without any check in to rural areas granting women 'easy payback' loans. These companies market loans and sell loans and therefore several people were induced to taking these loans. Currently families are struggling with loss of capital, malnutrition, domestic violence, sexual exploitation and suicides for the simple reason of not being able to pay back loans.

**However these Companies were unable to touch land /disposes people off their lands due to the protection in the LDO** of not being able to induce people to mortgage their lands without prior approval from the GA.

In recent discussions with farmers in Kilinochchi and Gampaha, farmers state they have fallen in to massive debts and have been struggling to repay. This is common knowledge. The answer to that is credit schemes which do not force farmers to endanger the last asset they own – their lands.

With the coming in of **this Bill, farmers who are desperate for credit will be exposed to Banks and financial institutions predatory loan schemes** which will lure farmers into accessing loans.

Created with
PDFBear.com

Their only purpose is to secure lands as collateral for the loans. **Farmers will not be able to pay back these loans next year and therefore they will lose their lands** particularly to Banks who have parate execution powers.

When this issue was raised in Parliament by an opposition MP, since he only spoke of farmers in the North and East. However this will affect across the country including Anuradhapura, Pollanaruwa, Moneragala and Gamapaha.

Created with
PDFBear.com